இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - மட்டம் 5
இறுதிப் பரீட்சை – 2006/2007
சுற்றாடல் சட்டம் - LWU 3314/4334
காலம்: மூன்று மணித்தியாலம்

திகதி: 22.03.2007 நேரம்: பி.ப 1.30 – பி.ப 4.30

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்

1. "தீர்ப்புக்களை வழங்குதல் மட்டும் நீதிபதிகளுடைய செயற்பாடு அல்ல, ஆயின் சட்டத்தை படைத்தலுமாகும். ஆகவே அபிவிருத்திக்கான உரிமை மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு என்பவற்றை உள்ளடக்கிய வகையில் மனித உரிமைகளுக்குள் சமநிலை அடைவதை மனதில் வைத்து சுற்றாடல் சட்டத்தின் அபிவிருத்தியில் நீதித்துறை சாதக செயலூக்க அணுகு முறையொன்றை கையாள வேண்டும்".

(Speech made by Justice Bhagwati, former Chief Justice of India, at the Global Judges Symposium on Sustainable Development and the Role of Law, August 2002).

இந்த இலக்கை பூர்த்தி செய்வதில் சார்க் வலய நீதித்துறை எத்துணை அளவுக்கு முயற்சி எடுத்துள்ளது என்பதை விளக்கி இக் கூற்றினை ஆராய்க. உமது விடையில் இலங்கை மற்றும் ஏனைய நாடுகளின் தீர்ப்பு சட்டங்கள் குறிப்பிடப்பட வேண்டும்மென நீர் வேண்டப்படுகிறீர்.

2. இலங்கையில் சுற்றாடல் முகாமைத்துவத்தில் பொது மக்களின் பங்களிப்பு தோல்வியடைந்துள்ளது என்பது நிருபிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பங்களிப்புக்கு உறுதுணையளிக்கின்ற ஏற்பாடுகளை கொண்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பவற்றுடன் தொடர்புறுத்தி இக்கூற்றினை ஆராய்க.

3. யக்விலா என அழைக்கப்படும் இயற்கை நீர்நிலை ஒன்றில், ஒன்றரை மைல் எல்லைக்குள் சர்வதேச விமான நிலையம் ஒன்றை நிர்மாணிக்க செலான் அரசாங்கம் தீர்மானித்தது. யக்விலா உலக பிரசித்த பெற்ற பறவை வாழிடம் ஒன்றாகும். யக்விலா பெயர்பெற்ற ஒரு உல்லாச பிரயாணிகளின் இடமாக இருப்பதோடு ஒரு நாளைக்கு ஏறக்குறைய 1000 உல்லாச பிரயாணிகள் வருகை தருகின்றனர்.

செலான் உடைய அனைத்து சட்டங்கள். ஒழுங்கு விதிகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்கள் என்பன இலங்கையை ஒத்தவையாகும். எவ்வாறாயினும் செலானுடைய சுற்றாடல் அமைச்சர் அண்மையில் தேசிய சுற்றாடல் சட்டத்தின்

கீழ் முன்னர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு இருந்த குறித்துரைக்கப்பட்ட உத்தேச செயற்திட்டங்களில் இருந்து விமான நிலையங்களை நீக்கினார்.

மித்திரன் மற்றும் முத்தையா இருவரும் விமான நிலைய நிர்மாணத்தை கேள்விக்குட்படுத்த விரும்புகின்றனர். அவர்கள் அவ்வாறு நடவடிக்கை எடுப்பதற்குரிய ஏதேனும் சட்ட அடிப்படை உண்டா என்பது தொடர்பில் அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக நிகழ்வுகளை அவர்கள் உமக்கு வழங்கியிருக்கிறார்கள்.

(அ) ரம்சார் உடன்படிக்கையின் கீழ் யக்விலா ஈரநிலமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) அப்பிரதேசம் பலவகையான ஆபத்தான பறவை இனங்களின் வாழ்விடமாகும்.

(இ) உலக மரபுரிமை சமவாயத்தின் கீழ் இயற்கை மரபுரிமை வலயமாக குறித்துரைக்கப்பட வேண்டுமென செலான் அரசு முன்னர் உத்தேசித்திருந்து ஆனால் பின்பு இந்த உத்தேச தீர்மானத்தை வாபஸ் பெற்றது.

(ஈ) விமான நிலையப்பிரதேசத்திற்கு அண்மை பகுதியொன்றில் புராதன தூபியொன்றின் சிதைவுகள் இருப்பதை தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம் அண்மையில் கண்டு பிடித்தது. அத்துடன் மேலும் இப் பிரதேசத்தில் ஒரு தொகையான சிதைவுகள் இருக்கலாம் என நம்பப்படுகிறது.

4. வரையறுக்கப்பட்ட அலியா டைல்ஸ் உற்பத்தியாளர் கம்பனி மெட்டிகம கிராமத்தில் ஓடு உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை அரம்பித்தது. இப்பிரதேசத்தில் களிமண் அகழ்ந்தெடுக்கக்கூடிய இடங்கள் அண்மையில் இருப்பதனால் இக்கிராமத்தில் இத்தகைய பல தொழிற்சாலைகள் இருந்தன. அலியா தொழிற்சாலை பிரதேச சபையிடம் இருந்து சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (EPL) ஒன்றை பெற்றதுடன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பல நிபந்தனைகளுக்கமைய தொழிற்சாலையை நிர்மாணித்தது. அத்துடன் மெட்டிகம பிரதேசத்தைச் சேர்ந்த 100க்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கியது.

தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு ஆறு மாதங்களின் பின்பு தொழிற்சாலை புகைபோக்கி துவாரங்களில் இருந்து வெளியேறுகின்ற புகையினால் தமக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என தொழிற்சாலைக்கு அருகில் இருந்த உடமையாளர்கள் முறையிட்டனர். மேலும் அண்மையில், தொழிற்சாலைக்கு அருகில் முன்பள்ளி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் பிரதேச சபை EPL ஐ இரத்துச் செய்ததுடன், உயர்ந்த புகைபோக்கி துவாரங்களை நிர்மாணிக்கும் வரையில் தொழிற்சாலை செயற்பாடுகளை நிறுத்துமாறு அலியா டைல்ஸ் தொழிற்சாலையிடம் கோரிக்கையை விடுத்திருந்தது.

புகைபோக்கிகள் பற்றிய விடயம் ஆரம்ப கட்டங்களில் கலந்தாலோசிக்கப்பட்டதாகவும் குறித்துரைக்கப்பட்டட நிபந்தனைகளுக்கு அமைவாக அவை நிர்மாணிக்கப்பட்டுள்ளது எனவும் அலியா டைல்ஸ் கம்பனி முறையிடுகிறது. மேலும் புகை போக்கிகளை மீள நிர்மாணிக்க தம்மிடம் நிதி

வசதி இல்லை எனவும் தொழிற்சாலை குறிப்பிடுகிறது. மேலும் கிராமத்தில் ஏற்கனவே வேலைவாய்ப்பற்றிருந்த 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடுகிறது.

தமது உரிமம் இரத்துச்செய்யப்பட்டமையை ஆட்சேபித்து அலியா டைல்ஸ் கம்பனி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது. இவ்வழக்கின் நீதிபதியாக நீர் நியமிக்கப்படுகிறீர். உமது தீர்ப்பை வழங்குக.

5. "புலன்குலம எதிர் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மற்றும ஏனையவர்களும்(2000) 3 Sri L R 234 (the Eppawela case) வழக்கு அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக நீதித்துறை மற்றும் பொது மக்கள் கட்டுப்பாடு என்பவற்றை மேலும் அதிகரிக்க செய்த முத்திரை பதித்த தீர்ப்பொன்றாகும்".

இத்தகைய கட்டுப்பாட்டை மேலும் அதிகரிக்க நீதிபதிகள் மற்றும் சட்டதரணிகள் ஆகியோரால் பயன்படுத்தப்பட்ட உபாயங்களை விளக்கி இக் கூற்றினை ஆராய்க.

6. "தேசிய சுற்றாடல் சட்டத்தில் உள்ளடக்கியவாறு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டின் தேவைப்பாடு,சுற்றாடல் நோக்கிலிருந்து மதிப்பிடப்படுகின்ற குறிப்பிட்ட செயல் திட்டங்களின் மதிப்பீட்டை மட்டும் தேவைப்படுத்துவதால் நிலையாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கு உறுதுணை வழங்கவில்லை".

இக்கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? இலங்கையர் அனைவருடைய தேவைகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில், சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு சட்டங்கள் திருத்தப்பட்ட அல்லது விரிவு படுத்தப்பட என்ன வகையான திருத்தங்களை நீர் பிரேரனை செய்வீர்?

7. கண்டி பூங்கா கொழும்பில் பிரதான இடமொன்றில் கடற்கரையை அண்மித்த ஒரு திறந்த பிரதேசத்தில் உள்ள ஒரு அகலமான பகுதியொன்றாகும். பிரித்தானிய காலப்பகுதியில் இருந்து இப்பிரதேசம் குறிப்பாக இளம் பிள்ளைகள், மற்றும் சுத்தமான கடற்காற்றை சுவாசிக்க விரும்புபவர்கள் உட்பட நகர வாசிகளால் பொழுது போக்கு பிரதேசம் ஒன்றாகவும் பூங்கா ஒன்றாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஏவ்வித கட்டணங்களும் இன்றி அனைவரும் சென்று வரக்கூடிய ஒரு திறந்த பூங்காவாகும். உணவு, விளையாட்டு பொருட்கள், பலூன்கள் மற்றும ஏனைய வாணிப பொருட்களை வியாபாரிகள் எவ்வித கட்டணமும் இன்றி வியாபாரம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிறுவர்கள் குதிரை சவாரி உட்பட ஏனைய பொழுது போக்குகளை பூங்காவில் அனுபவிக்கின்றனர்.

குறிப்பிட்ட பூங்கா ஐம்பது வருடங்களுக்கு மேலதிகமாக கொழும்பு மாநகரசபை நியாயாதிக்கத்திற்குள் இருந்தது, ஆயின் தற்போது நகர அபிவிருத்தி அதிகார சபை(UDA) பூங்காவை பொறுப்பேற்றது. பூங்காவை பொறுப்பேற்ற UDA சிறுவர்களுக்கென விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்யும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற வரையறுக்கப்பட்ட Fun and Games கம்பனிக்கு பூங்காவை குத்தகைக்கு வழங்க தீர்மானித்தது. Fun and Games கம்பனி பூங்காவை சுற்றி வேலி அடைத்து, தமது சொந்த பொழுது போக்கு உபகரணங்களை பொருத்தி பூங்காவை அபிவிருத்தி செய்ய தீர்மானித்தது. மைதானத்தில் ஓர் பிரிவில் பல மாடிகள் கொண்ட கார் தரிப்பிடம் ஒன்றை நிர்மாணிக்க திட்டமிடுகிறது. இதன் பின்பு பொது மக்கள் கட்டணம் செலுத்த

வேண்டும் எனவும் ஏனைய தெரு வியாபாரிகள் மற்றும் ஏனைய பொழுது போக்குகளை வழங்குகின்ற அனைவரும் உட்பிரவேசிப்பதிலிருந்து தடுக்கப்பட வேண்டுமெனவும் திர்மானித்தது.

(அ) பொது அக்கறை கருதி தனியார் கம்பனி ஒன்றிற்கு பூங்கா குத்தகைக்கு வழங்கப்படுவதை நிஹால், நிஷானி ஆகியோர் கேள்விக்குட்படுத்த விரும்புகின்றனர்

(ஆ) பூங்காவிற்கு வியாபாரம் செய்ய ஒரு போதும் அனுமதிக்கப்படாத வியாபாரிகளும் இப் புதிய செயற் திட்டத்தை கேள்விக்குட்படுத்த விரும்புகின்றனர்.

நீர் கற்ற சட்டத்தை கருத்தில் எடுத்து இவ்விடயம் தொடர்பில் மேலே குறிப்படப்பட்டவர்களால் எவ்வகையான வாதங்களை முற் போடலாம் என்பது தொடர்பில் அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

8. “தேசிய சுற்றாடல் சட்டத்திலுள்ள சூழல் மாசடைதலை கட்டுப்படுத்தல் தொடர்பான ஏற்பாடுகள் வரையறுக்கப்பட்டும் வினைத்திறனற்றும் காணப்படுகின்றன. சூழல் மாசடைதலை ஏற்படுத்தும் கைத்தொழில்களால் பாதிக்கப்பட்டோர் பொதுத் தொல்லைச் சட்டங்களின் கீழ் மிக வினைத்திறன் மிக்க நிவாரணம் ஒன்றை பெற்றுக் கொள்ள வேண்டும்”.

இக்கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச்சட்டங்கள் என்பவற்றுடன் கூடிய விமர்சன பகுப்பாய்வு ஒன்றுடன் இக் கூற்றை ஆராய்க.

(பதிப்புரிமை பெற்றது)